யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

சாவகச்சேரி

# பரிசில் நாள் - 2013

காலம்

**08.05.2013 புதன் கிழமை பி.ப 2.00 மணி**

தலைமை

**திரு.செ.பேரின்பநாதன் அவர்கள்**

*வித்தியாலய முதல்வர்*

பிரதம விருந்தினர்

**திருவாளர் ந.சோமஸ்கந்தராஜா அவர்கள்**

*உதவிக்கல்விப்பணிப்பாளர்,ஆங்கிலம்,மாகாணக்கல்வித்திணைக்களம்,வடமாகாணம்*

சிறப்பு விருந்தினர்

**திருவாளர்.த.சிறீஸ்கந்தராஜா அவர்கள்**

*ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர், ஆரம்பக்கல்வி,தென்மராட்சிக்கல்விவலயம்*

கௌரவ விருந்தினர்

**திருவாளர் வீ.நடராசா அவர்கள்**

*ஓய்வுநிலை உபஅதிபர்,யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்*

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

*பாடசாலைச் சமூகம்*

*யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்*
*சாவகச்சேரி*
*08.05.2013*

School1003021 @. Gmail. Com.

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

பரிசில் நாள்

08.05.2013 புதன்கிழமை பி.ப. 2 மணி

# நிகழ்ச்சி நிரல்

1. விருந்தினர்களை அழைத்து வரல்
2. மங்கள விளக்கேற்றல்
3. இறைவணக்கம்
    - தேவாரம்
    - கிறிஸ்தவ பாடல்
4. தேசியக்கொடி ஏற்றல்
5. தேசிய கீதம் இசைத்தல்
6. பாடசாலைக் கொடி ஏற்றல்

   பாடசாலைக் கீதம் இசைத்தல்
7. நிறுவுனர் படத்திற்கு மாலை அணிவித்தல்

   நினைவுச்சுடர் ஏற்றல்
8. வரவேற்பு நடனம் (தரம்-11 இ.தர்சிகா, வித்தியா)
9. வரவேற்புரை
10. பரிசில்நாள் அறிக்கை
11. பரிசில் வழங்கல்
12. சிறப்பு விருந்தினர் உரை
13. பரிசில்நாள் உரை
14. கலை நிகழ்வுகள்
    1. மீனவ நடனம் (தரம் - 6,7 மாணவிகள்)
    2. English group song (Grade -10, 11)
    3. சிறுவர் நாடகம் (ஒற்றுமையின் சின்னம்)
15. நன்றியுரை
16. தமிழ்த் தாய் வாழ்த்து

# பாடசாலைக் கீதம்

வடஈழ நாட்டின் வளமிகு பதியென
வகுத்ததென் மட்டுவில் அதனில்
வள்ளல் முத்து உபாத்தியார் தந்த
வனப்புறு கல்விக் கழகம்
அது தலைமுறை தலைமுறை வாழ்க
எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை

ஆயிரம் தொளு தொள்ளாயிரத் தெட்டாம்
ஆண்டு வைகாசி நல் எட்டில்
அருளொளி பரப்பி நின்றறிவினை வளர்த்திட
அமைத்தனர் நல்லறச் சாலை
அது தலைமுறை தலைமுறை வாழ்க
எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை

சைவமும் தமிழும் கண்ணெனப் போற்றி
தகைபெற அமைத்த நற்சாலை
சாஸ்திரம் பற்பல பயிற்றிட வந்த
சன்மார்க்க போதன சாலை
அது தலைமுறை தலைமுறை வாழ்க
எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை

இயல்இசை நாடகம் ஆங்கிலம் யாவும்
இனிதாய் வளர்துமை ஓங்க
இளஞ்சிறு மாணவர் மனத்திடை எங்கும்
எழில் பெறும் அணையா தீபம்
அது வாழ்க பல்லாண்டு வாழ்க
எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை

வாழ்க வாழ்க வாழ்க!
வாழ்க நீடுழி வாழ்க!
வாழ்க நீடுழி வாழ்க!

# பரிசில் நாள் அறிக்கை-2013

இன்றைய எமது பரிசில் நாள் நிகழ்வை சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய விருந்தினர்கள் வரிசையில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் வடமாகாண கல்வித் திணைக்கள ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு. நல்லையா சோமஸ்கந்தராஜா அவர்களே! சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள தென்மராட்சிக் கல்வி வலய ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.த.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களே! கௌரவ விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் ஓய்வு நிலை உபஅதிபர் உயர்திரு.வீ.நடராஜா அவர்களே! மற்றும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் பிரதிக்கல்விப்பணிப்பாளர்களே! உதவிக்கல்விப்பணிப்பாளர்களே! முதன்மை ஆசிரியர்களே! பாடசாலை அதிபர்களே! ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்களே! ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் அவர்களே! ஓய்வுநிலை அதிபர்களே! ஓய்வுநிலை ஆசிரியர்களே! ஆசிரியர்களே! பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே! பாடசாலை மேம்பாட்டுக்குழு உறுப்பினர்களே! பழைய மாணவர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! அன்பான மாணவச் செல்வங்களே! தங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வடைவதோடு அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதன்மை விருந்தினர் அவர்களே!

எமது பாடசாலை ஸ்தாபகர் குடும்ப உறுப்பினரும், எமது பாடசாலையின் பழைய மாணவரும் கல்விப்புலத்தில் பல உயர் பதவிகளை வகித்து தற்போது வடமாகாணக் கல்வித்திணைக்களத்தில் ஆங்கிலபாட உதவிக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றும் திரு.நல்லையா சோமஸ்கந்தராஜா அவர்களே! எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்று, இடைநிலைக்கல்வி உயர்கல்வி முதலானவற்றை யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றில் கற்று, தங்கள் ஆசிரியர் பயிற்சியை மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நிறைவு செய்து, மேலும் தங்களது உயர்கல்வித்துறை சார்ந்த பல பட்டங்களை கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இங்கிலாந்து Derriford பல்கலைக்கழகம் முதலானவற்றில் பெற்று கல்விப்புலத்தில் சிறந்து மிளிர்கின்ற தாங்கள் அதிபராக, ஆசிரியர் வளநிலைய இணைப்பாளராக சிறப்பாகக் கடமையாற்றி பிறந்து வளர்ந்த இம் மண்ணில் வடக்கு மாகாணக் கல்வித்திணைக்கள ஆங்கில பாட உதவிக்கல்விப்பணிப்பாளராக உயரிய பணியாற்றுவதையிட்டு பாடசாலைச் சமூகம் பெருமையடைவதோடு தங்களை வருக வருக என வரவேற்கின்றோம்.

சிறப்பு விருந்தினர் அவர்களே!

தென்மராட்சிக் கல்வி வலய ஓய்வு நிலை ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களே! எமது பாடசாலையின் சிறப்பு விருந்தினர் அழைப்பினை ஏற்று வருகை தந்திருக்கும் தங்களுக்கு முதற்கண் எமது நன்றிகள். இம்மட்டுவில் பதியினை பிறப்பிடமாகக் கொண்ட தாங்கள் சிறந்த நல் கணித ஆசானாக மிளிர்ந்து, எமது பாடசாலையிலும் சில காலம் அரும்பணியாற்றிய பெருமைக்குரியவரும், கல்விப்புலத்தில் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளராக தாங்கள் ஆற்றிய சேவையினை எமது பாடசாலை சமூகம் நன்றியுடன் நினைவு கூருகின்றது. தங்களின் ஓய்வுக்காலம் சிறப்படையவும் நலம்பெறவும் இறைவனை வேண்டுவதோடு தங்களை வருக வருகவென வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

கௌரவ விருந்தினர் அவர்களே!

எமது பாடசாலையில் அரும்பணியாற்றிய ஓய்வுநிலை உபஅதிபர் திரு.வீரகத்தி நடராஜா அவர்களே! இப்பாடசாலையில் தாங்கள் ஆசிரியராகவும், உபஅதிபராகவும் கடமையாற்றி உள்ளீர்கள். சேவை மனப்பாங்கும் அர்ப்பணிப்பும் மிக்க

தாங்கள் பாடவிதான, இணைபாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை மேன்மையுற வைத்துள்ளீர்கள். தாங்கள் எமது பாடசாலையில் ஆற்றிய சேவையினையிட்டு தங்களை கௌரவிப்பதில் நாம் பெருமகிழ்வடைவதோடு தங்களை பாடசாலை சமூகம் சார்பாக வருக வருகவென வரவேற்கின்றோம்.

இன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், ஓய்வு நிலை அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், ஓய்வு நிலை கல்விப்புல உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க, மேம்பாட்டுக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இவ் விழாவிற்கு எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் மீண்டும் ஒருமுறை வருக வருகவென வரவேற்று இப்பரிசில் நாள் அறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

## பாடசாலை வரலாறு

தென்மராட்சியின் புகழ் பூத்த மட்டுவில் பதியில் 1908 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் எட்டாம் நாள் புண்ணிய சீலர் உயர்திரு.முருகேசு முத்துத்தம்பி உபாத்தியாயரால் ஆரம்பிக்கப்பட்டதே எமது பாடசாலையாகும். இலவச போதனா பாடசாலையாகவும் இப்பகுதி மாணவரின் அறிவுப் பசியைத் தீர்க்கும் ஆலயமாகவும் எமது பாடசாலை விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 1908 ஆம் ஆண்டிலிருந்து 1962 வரை எமது பாடசாலை நிர்வாகம் ஸ்தாபகர் உயர்திரு முத்து உபாத்தியாயர் கண்காணிப்பில் இருந்தது. 1914ஆம் ஆண்டு எமது பாடசாலை அரசினர் நன்கொடை பெறும் பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது. 1962 பங்குனி 3ஆம் திகதி அரசினால் சுவீகரிக்கப்பட்டது.

இன்று வகை 2 பாடசாலைகள் வரிசையில் முன்னணியில் திகழும் எமது பாடசாலை கல்வி அபிவிருத்தியில் வளர்ச்சி பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலையில் புகழ்பூத்த அதிபர்கள் பலர் சிறப்பாகக் கடமையாற்றியுள்ளனர். அந்த வகையில் 19வது அதிபராக 02.11.2012 முதல் நான் பதவியேற்றுள்ளேன்.

இப் பரிசில் நாள் வருடாவருடம் இப் பாடசாலை ஸ்தாபக தினமாகிய வைகாசி மாதம் 8ஆம் திகதி கொண்டாடப்படுவதென்று பாடசாலை சமூகம் தீர்மானித்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயம் ஆகும்.

## ஆசிரியர் குழாம்

எமது பாடசாலையில் தற்போது 16 நிரந்தர ஆசிரியர்களும் 2 பகுதி நேர ஆசிரியர்களுமாக மொத்தம் 18 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். இந்த ஆசிரியர்களின் விடா முயற்சியும் அர்ப்பணிப்பும், அயராத உழைப்பும் எமது வித்தியாலய மாணவர்களின் கல்வி உயர்வுக்கு உந்து சக்தியாக விளங்குகின்றது. அத்துடன் 2011, 2012 ஆம் ஆண்டுகளில் எமது ஆசிரியர் குழாத்துடன் புதிதாக இணைந்து கொண்ட திருமதி.நி.இராஜகுலேந்திரன், திருமதி.ற.பாஸ்கரன், திரு.சி.பகீரதன், திரு.ஞா.இன்பகரன், திருமதி.ச.வலன்ரைன் தினேஸ், திரு.சி.சிவானந்தம், செல்வி.சி.கந்தசாமி ஆகியோரை இன்முகத்துடன் வரவேற்கின்றோம்.

எமது பாடசாலையில் அரும்பணியாற்றி 2011, 2012 ஆம் ஆண்டுகளில் இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்களான திருமதி.தி.யுகதாஸன், திருமதி.சா.ஸ்ரீகிருஸ்ணன், திரு.தி.கிருஸ்ணமூர்த்தி ஐயா, திருமதி.வி.மோகலிங்கம், திருமதி.சி.இராகவன், திரு.செ.பரணீதரன், திருமதி.ந.தவராசா, தற்காலிக இணைப்பில் கடமையாற்றிய திருமதி.சு.லெனின்குமார், கற்பித்தல் பயிற்சி ஆசிரியர் திரு.க.கஜேந்திரன் ஆகியோரின் தன்னலமற்ற சேவையினை நினைவு கூருவதுடன் அவர்களின் எதிர்காலம் சிறக்க எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களிடமிருந்து 2012 ஆம் ஆண்டுக்கான நல்லாசிரியர் விருதான “பிரதீபா பிரபா” விருதினைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியையான திருமதி.ஜெ.லு.க.கிறிஸ்ரிரஞ்சன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகளும் பட்டங்களும் பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

அத்துடன் எமது பாடசாலையில் 01.01.2009 தொடக்கம் 13.08.2012 வரை அதிபராக கடமையாற்றி யா/ கொடிகாமம் அ.த.க பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு.காசிநாதர் குணசிங்கம் அவர்களது அர்ப்பணிப்பு மிக்க சேவையினை நினைவு கூர்வதோடு அவர் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

மேலும் எமது பாடசாலையில் 01.06.1997 முதல் 23.09.2012 வரை 15 ஆண்டுகள் கணித ஆசானாகவும் உபஅதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற திரு.சுப்பிரமணியம் சிவகுமாரன் அவர்களின் தன்னலமற்ற சேவையினையும் பாடவிதான இணைபாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை மேன்மையுறச் செய்த அவர் தம் ஆசிரியப் பணியினையும் வியந்து போற்றி நிற்கின்றோம். பாடசாலை சமூகம் சார்பாக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர் தம் ஓய்வுக்காலம் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

### எமது வித்தியாலய மாணவச் செல்வங்களும் அவற்றின் வெளிப்பாடுகளும்

எமது வித்தியாலயத்தில் தரம்-1 தொடக்கம் தரம்-11 வரை 206 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 – 5 | 46 | 47 | 93 |
| 6 – 9 | 37 | 27 | 64 |
| 10 – 11 | 20 | 29 | 49 |
| மொத்தம் | 103 | 103 | 206 |

### கல்விச் செயற்பாடுகள்

எமது பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் அர்ப்பணிப்பும், வினைத்திறனும் மிக்க ஆசிரியர்களினதும், விடாமுயற்சியுள்ள மாணவர்களினதும் பங்களிப்பினால் 2011, 2012 காலப்பகுதிகளுக்கான க.பொ.த (சா/த) பெறுபேறுகள் உயர்வடைந்துள்ளன. 2011 இல் செல்வி.த.தர்மிகா 5A, B, 3C பெறுபேற்றையும் 2012 இல் செல்வி.ஞா.பிருசாந்தி 7A, B, C பெறுபேற்றையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இம் மாணவர்களைப் பாராட்டுவதுடன் இவர்களுக்குக் கற்பித்த பாட ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம்.

எமது பாடசாலையில் 2012 புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வன்.ஜெ.ஜெகதீஸ்வரன் 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இம் மாணவரைப் பாராட்டுவதுடன் இவருக்குத் தரம் 5இல் கற்பித்த திருமதி.நி.இராஜகுலேந்திரன் அவர்களையும் ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது பாடசாலை மாணவி ஞா.பிருசாந்தி 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற சமூக விஞ்ஞான போட்டியில் பங்குபற்றி வலய மட்டத்தில் 2ம் இடமும் மாகாண மட்டத்தில் 1ம் இடமும் அகில இலங்கை ரீதியில் 5 இடமும் பெற்றதுடன் 2012 ஆம் ஆண்டிலும் நடைபெற்ற சமூக விஞ்ஞான போட்டியில் பங்குபற்றி வலய மட்டத்தில் 2ம் இடமும் மாகாண மட்டத்தில் 1ம் இடமும் அகில இலங்கை ரீதியில் 5 இடமும் பெற்றதுடன் தொடர்ச்சியாக மூன்றாண்டுகள் தேசியரீதியில் சாதனைபடைத்து, எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவரைப் பாராட்டுவதோடு இவருக்குக் கற்பித்த ஆசிரியர் திரு.ம.லினாஷ்குமார் அவர்களை பாராட்டுவதுடன் அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கு பற்றி செல்வன்.வா.லக்சன் 75m ஓட்டம், நீளம் பாய்தல் ஆகியவற்றில் 1ம் இடமும் செல்வி.ஞா.லோஜினி நீளம் பாய்தலில் 2ம் இடமும் செல்வன்.கு.லக்சன் உயரம் பாய்தலில் 2ம் இடமும் செல்வன்.ர.கோபிகரன் குண்டு போடுதலில் 2ம் இடமும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கு பற்றி செல்வி.த.தர்மிகா வலயமட்ட விளையாட்டுப் போட்டியில் 9 வயதுப் பிரிவில் வெற்றி வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செல்வி.ஞா.லோஜினி 75m ஓட்டத்தில் 2ம் இடமும் ச.சஞ்சியா 100m ஓட்டம் 2ம் இடமும் செல்வன்.யோ.தனோஜன் உயரம் பாய்தல் 2ம் இடமும் செல்வன்.ர.கோபிகரன் குண்டு போடுதலில் 2ம் இடமும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் ஆக்கப் போட்டியில் அ.மோகனராஜ் வலயமட்டத்தில் 1ம் இடமும் உ.செந்தூரி சிறுகதை ஆக்கப் போட்டியில் வலயமட்டத்தில் 2ம் இடமும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில தின போட்டிகளில் பா.கோசலா ஆங்கில கவிதை ஒப்பனையில் (Recitation) வலயமட்டத்தில் 2ம் இடமும் ஆங்கில மேற்பிரிவு விவாதம் (Debate) வலயமட்டத்தில் 3ம் இடமும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில தின போட்டிகளில் அ.மோகனராஜ் ஆங்கில வாசிப்பில் (Reading) வலயமட்டத்தில் 3ம் இடமும் பா.கோசலா ஆங்கில கவிதை ஒப்பனையில் (Recitation) வலயமட்டத்தில் 1ம் இடமும் அ.மதுசாளினி ஆங்கில கதை கூறலில் (Story telling) வலயமட்டத்தில் 2ம் இடமும் தரம் 9 மாணவர்களின் ஆங்கில வகிபங்கு ஏற்று நடித்தல் (Role play) வலயமட்டத்தில் 1ம் இடமும் தரம் 11 மாணவர்களின் ஆங்கில வகிபங்கு ஏற்று நடித்தல் (Role play) வலயமட்டத்தில் 2ம் இடமும் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ABoE Action Song குடும்பப் பாடசாலைகளுக்கிடையில் 1ம் இடமும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைப் பயிற்றுவித்த ஆங்கில பாட ஆசிரியர் திரு.சி.பகீரதன் அவர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## பாடசாலை முகாமைத்துவக் குழு

பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பையும் கல்விச்செயற்பாடுகளையும் வினைத்திறன்மிக்கதாக்கும் வகையில் பாடசாலை முகாமைத்துவக்குழு செயலாற்றுகின்றது. இக் குழு மாணவர் ஒழுக்கம், கற்றல் மேம்பாடு, பாடசாலை பாடவிதான, இணைபாடவிதான செயற்பாடுகள் போன்ற அனைத்திலும் முக்கிய பங்காற்றுகின்றது.

பாடசாலை ஒழுக்காற்றுக் குழு

மாணவர்கள் பாடசாலை ஒழுங்கு விதிகள் கட்டுப்பாடுகளை உரியவகையில் பின்பற்றி நடப்பதற்கு இக் குழு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு செயற்படுகின்றது. மாணவர்களை நற் பிரஜைகளாக்கி சமூகத்திற்கு வழங்க செயலாற்றுகின்றது.

கட்டாயக் கல்விக் குழு, வரவழைத்தல் குழு

இவ்விரு குழுக்களும் மாணவர்களின் கல்வியறிவை மேம்படுத்து நோக்கில் மாணவர் வரவை அதிகரித்து கற்றல் அடைவுமட்டத்தை உயர்த்துவதற்கு பாடசாலையில் செயற்படுகின்றது.

பாடசாலை மேம்பாட்டுக் குழு

ஒரு பாடசாலையின் கல்வி அபிவிருத்தி, பௌதீக வள அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட இக் குழுவானது எமது பாடசாலையில் சிறந்த முறையில் செயற்பட்டுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

அனர்த்த முகாமைத்துவக் குழு

பாடசாலையில் திடீரென ஏற்படும் இயற்கை அனர்த்தங்களில் இருந்தும், ஏனைய அனர்த்தங்களில் இருந்தும் மாணவர்களையும், பாடசாலை சமூகத்தினரையும் பாதுகாக்கும் நோக்குடன் இவ் அனர்த்த முகாமைத்துவக் குழு சிறப்பாக இயங்கி வருகின்றது.

சுகாதாரக் குழு

மாணவர்களின் சுகாதாரப் பழக்க வழக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் எமது பாடசாலையில் சுகாதாரக் கழகம், மாணவர் ஆசிரியர்களின் சிறப்பான செயற்பாடுகளுடன் இயங்கி வருகின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

எமது பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பங்களிப்பு அளப்பரியது. மாணவர்களின் கற்றல், இணைபாடவிதான செயற்பாடுகளில் இச் சங்கத்தின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

பாடசாலையின் உயிரோட்டமான செயற்பாடுகளுக்கு உறுதுணையாக விளங்கும் ஆசிரியர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்குபற்றுவதுடன், ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு சேவைநலன் பாராட்டும், இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கு பிரிவுபசார விழாவும் நடாத்தி வாழ்த்தி பரிசில் வழங்கி கௌரவித்து வருகின்றது.

இணைபாடவிதான செயற்பாடுகள்

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் ஆளுமைத் திறன்களை விருத்தி செய்வதற்கு இணைபாடவிதான செயற்பாடுகள் பிரதான இடம் வகிக்கின்றது.

எமது பாடசாலையில் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வருடந்தோறும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. 2011, 2012 இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. 2011 இல் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராக உதவிப் பிரதேச செயலாளர் செல்வி.நா.ரஞ்சனா அவர்களும் 2012 இல் இல்ல மெய்வன்மைப்

போட்டியில் பிரதம விருந்தினராக பொறியியலாளர் திரு.பீ.கணேசலிங்கம் அவர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலை மாணவர்கள் வலய மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்று மாவட்டமட்டப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளனர்.

**மன்றங்கள்**

ஆரம்பப்பிரிவு மாணவர் மன்றம், தமிழ் மன்றம், இந்து மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம் என்பன எமது பாடசாலையில் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. இம் மன்றச் செயற்பாடுகளினூடாக மாணவர்களின் திறன்கள் விருத்தி செய்யப்படுகின்றன.

**கிடைக்கப் பெற்ற வளங்கள்**

எமது பாடசாலை மாணவர்களின் கற்றல் மேம்பாட்டுக்கு உதவும் வகையில் யா/ டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் சங்க இலண்டன் கிளையினர் றோணியோ இயந்திரம் ஒன்று, போட்டோ பிரதி இயந்திரம் ஒன்று, Water fillter (தண்ணீர் வடிகட்டிகள்) நான்கு, 60 பிளாஸ்ரிக் கதிரைகள் ஆகியவற்றை வழங்கியுள்ளனர். கல்வி அமைச்சு EKSP திட்டத்தின் கீழ் எமது பாடசாலைக்கு ஐந்து கணனிகள் வழங்கப்பட்டதுடன் கணனி அறையும் அமைத்துத் தரப்பட்டுள்ளது. அத்துடன் ESDG நிதியீட்டத்தின் கீழ் ஆறு கணனிகள் வழங்கப்பட்டுள்ளது. இடைநிலைக் கல்வி நவீன மயமாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் ஆங்கில செயற்பாட்டறை அமைக்கப்பட்டதுடன் தொலைக்காட்சி, கணனி, பல்லூடக எறியி (Multi media), கணனி மேசை என்பனவும் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் இடைநிலைக் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தும் வகையில் SDMG நிதியீட்டத்தில் ரூ.100,000.00 கிடைக்கப்பெற்று கணனி அறை மேம்படுத்தல், பாடசாலைத் தோட்டப் புனரமைப்பு, கற்பித்தல் காட்சிப் பலகை கொள்வனவு, மாணவர் துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் அமைத்தல் ஆகிய செயற்பாடுகள் இடம் பெற்றன.

பாடசாலையில் பிள்ளை நேய செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் யுனிசெவ் நிறுவனத்தினரால் ரூ.100,000.00 வழங்கப்பட்டது. இந் நிதியிலிருந்து முத்து மண்டப கூரைத் திருத்தம், தரம் 3, 4, 5 கவின்நிலை மேம்பாடு ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் திறந்த வெளி கலையரங்கு கூரை வேலைத் திருத்தமும் செய்யப்பட்டது.

அத்துடன் அமரர் திரு.செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினர் கணனி அலகு மேம்பாட்டிற்காக ரூ.30,000.00 அன்பளிப்புச் செய்துள்ளனர்.

திரு.நா.செந்தில்நாதன் குடும்பத்தினர் கணனி அலகுக்கென கணனி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

**கற்றல் நிதி உதவிகள்**

ஓய்வு நிலை வடகிழக்கு மாகாண ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வி.குமாரசாமி ஞானேஸ்வரி (SLEAS) அவர்களின் கற்றல் நிதியுதவியான ரூ.10,000.00 இனை தவணை தோறும் 11 மாணவர்களுக்கு வழங்கி வருகின்றோம். கனடா வாழ் மட்டுவில் மக்களின் ரூ.5,000.00 எமது பாடசாலையைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் பெற்றுப் பயனடைகிறார்கள். அத்துடன் தென்மராட்சி கல்வி வலய ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் கிருபா வீரசிங்கம் அவர்களின் புலமைப்பரிசில் நிதி ரூ.2,000.00 பெற்று எமது மாணவர்கள் பயனடைகின்றனர். அத்துடன் கதிர்காமத்தம்பி புலமைப் பரிசில், சிசில் திரிய புலமைப் பரிசில் நிதி, தரம் 5 புலமைப்பரிசில் நிதி, சிறுவர்களுக்கான

கருணை இல்ல நிதி உதவி, சிறுவர்களுக்கான அவுஸ்திரேலியா நிதி உதவி என்பவற்றையும் மாணவர்கள் பெற்றுப் பயனடைகின்றனர்.

**வளத் தேவைகள்**

எமது பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடம், மனைப்பொருளியல் ஆய்வு கூடம், நுண்கலை செயற்பாட்டறைகள் ஆகியவற்றுடன் பாடசாலைக்கென பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சுற்றுமதிலும் நிறைவு செய்ய வேண்டிய தேவை உள்ளது.

**நன்றியுரை**

எமது அன்பான அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்து எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவிக்கவிருக்கும் வடமாகாண ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.ந.சோமஸ்கந்தராஜா அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.த.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களுக்கும், கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள இப்பாடசாலையின் ஓய்வுநிலை உபஅதிபர் திரு.வீ.நடராஜா அவர்களுக்கும் மற்றும் இன்றைய நிகழ்வினை சிறப்பிப்பதற்காக வருகை தந்திருக்கின்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவ சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய பரிசில் நாள் நிகழ்வினை நடாத்துவதற்கு நிதியுதவியினை வழங்கிய அன்பான பெற்றோர்களுக்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், பாடசாலை மேம்பாட்டுக் குழுவினருக்கும், எமது பாடசாலை ஆசிரியர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் எனது மனம் கனிந்த நன்றிகள்.

இத்திறந்த வெளி அரங்கிற்கு வர்ணம் பூசுவதற்கு நிதி உதவி வழங்கிய எமது பழைய மாணவர்கள் தே.வித்தகன், தே.விதுர்ணன் அவர்களுக்கும் விளையாட்டு முற்ற புனரமைப்புக்கென நிதி உதவி வழங்கிய திரு.சோ.சுவாமிநாதன் குடும்பத்தினருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப் பரிசில் நாள் சிறப்புற நடைபெறுவதற்கு முழுமனதுடன் ஒத்துழைத்து தம்மை அர்ப்பணித்து உதவிய உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த நன்றிகள்.

எமது அன்பான அழைப்பினை ஏற்று இன்றைய பரிசில் நாளினை சிறப்பிக்க வருகைதந்த அனைத்து உள்ளங்களுக்கும் இவ் அறிக்கையினைச் செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"நன்றி"
வணக்கம்

**திரு.செ.பேரின்பநாதன்**
(வித்தியாலய முதல்வர்)

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
2011, 2012 பரிசில் பெறும் மாணவர் விபரம்.

| தரம் - 2 | | | |
|---|---|---|---|
| இல. | மாணவர் பெயர் | 2011 | 2012 |
| 01. | ந.பானுஜன் | | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 02. | அ.நற்குமரன் | | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம்<br>பண்ணிசை சிறப்புத் தேர்ச்சி, அறநெறி மனனம், திருக்குறள் தேர்ச்சி |
| 03. | ச.சாகித்தியன் | | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 04. | ஞா.லோசனன் | | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம்<br>வாய்பாடு சிறப்புத் தேர்ச்சி |
| 05. | து.டானுசா | | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| தரம் - 3 | | | |
| 06. | வ.சன்ஜய் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி,<br>உறுப்பெழுத்து (வலயமட்டம் சிறப்புத்தேர்ச்சி) | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம்<br>வாய்பாடு சிறப்புத் தேர்ச்சி |
| 07. | இ.வத்ஸரன் | தமிழ், கணிதம், சமயம், பொதுத்தேர்ச்சி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 08. | ர.சுடரோன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி, | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 09. | ஜெ.துவாரகன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி, | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம்<br>வாய்பாடு சிறப்புத் தேர்ச்சி |
| 10. | டா.டிரோன்சன் | கணிதம், சமயம் | |
| 11. | சி.சிந்துஜன் | கணிதம், சுற்றாடல், தமிழ் | |
| 12. | சி.தருணிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி, | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 13. | ர.நிவேதிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி, | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 14. | து.கவிப்பிரியா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி, | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் பண்ணிசை சிறப்புத் தேர்ச்சி |

| | | | |
|---|---|---|---|
| 15. | து.பிறின்சியா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி, | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 16. | சி.சுவேதா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி,<br>பண்ணிசை (வலயமட்டம் சிறப்புத்தேர்ச்சி) | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 17. | ஜெ.துவாரகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி, | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் வாய்பாடு சிறப்புத் தேர்ச்சி |
| 18. | இ.சோபிகா | | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 19. | வ.சரோணியா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி, | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 20. | ர.நிரோஜா | கணிதம், தமிழ், சுற்றாடல் | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 21. | க.துசானன் | பந்து எறிதல் (வலய மட்டம் 3ம் இடம்) | |
| 22. | பி.டனிஷா | | பண்ணிசை சிறப்புத் தேர்ச்சி |
| தரம் - 4 | | | |
| 23. | மோ.ஜெனுசன் | தமிழ், கணிதம் | |
| 24. | அ.ஜனுசன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி,<br>பண்ணிசை (வலயமட்டம் சிறப்புத்தேர்ச்சி),<br>அறநெறி மனனம், திருக்குறள் (வலயமட்டம் தேர்ச்சி) | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்<br>பண்ணிசை சிறப்புத் தேர்ச்சி |
| 25. | பா.சூரியா | கணிதம், தமிழ் | தமிழ் |
| 26. | பா.விந்துஜன் | கணிதம் | கணிதம் |
| 27. | செ.யதுசன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி,<br>திருக்குறள் (வலயமட்டம்) | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 28. | பா.லினோஜன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி,<br>அறநெறி மனனம் (வலயமட்டம் தேர்ச்சி), திருக்குறள் (வலயமட்டம் தேர்ச்சி) | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்<br>பண்ணிசை சிறப்புத் தேர்ச்சி |
| 29. | சி.அபிஷா | தமிழ், கணிதம் | |
| 30. | மோ.விசாலினி | கணிதம் | தமிழ், சுற்றாடல், ஆங்கிலம் |
| 31. | தி.சயந்தா | தமிழ், கணிதம் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 32. | ச.அபிஸ்ணவி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி,<br>கோலம் (வலயமட்டம் சாதாரண தேர்ச்சி) | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 33. | த.தர்மிகா | | தமிழ் |

| | | | |
|---|---|---|---|
| 34. | இ.பிரதீபா | | தமிழ் |
| 35. | ர.சர்மிளா | கணிதம் | தமிழ் |
| தரம் - 5 | | | |
| 36. | அ.மோகன்ராஜ் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி<br>பண்ணிசை (வலயமட்டம் அதிவிசேட தேர்ச்சி),<br>துரித கணிதப் போட்டி, அறநெறி மனனம், உறுப்பெழுத்து, ஆங்கில சொற்களஞ்சியம் (வலயமட்ட சிறப்புத் தேர்ச்சி) | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்<br>ஆங்கில வாசிப்பு வலயமட்டம் 3ம் இடம்<br>பண்ணிசை, வாய்பாடு மனனம், துரித கணிதப் போட்டி சிறப்புத் தேர்ச்சி |
| 37. | வி.வைஸ்ணவன் | தமிழ், கணிதம், ஆங்கிலம், சமயம் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 38. | ச.பானுஜன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி, துரிதகணிதப் போட்டி (வலயமட்டம் சிறப்புத் தேர்ச்சி) | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்<br>பண்ணிசை, துரித கணிதப் போட்டி சிறப்புத் தேர்ச்சி |
| 39. | சு.டிலக்ஷன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பொதுத்தேர்ச்சி | சுற்றாடல் |
| 40. | ச.அபிவிஸ்ணு | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 41. | வீ.மதுர்சன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 42. | தி.சஞ்சீவன் | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 43. | லா.லக்ஷன் | சுற்றாடல் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 44. | ஜெ.தனுசன் | | தமிழ், சுற்றாடல், சமயம் |
| 45. | பா.புவிதன் | | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்<br>வாய்பாடு மனனம், துரித கணிதப் போட்டி சிறப்புத் தேர்ச்சி |
| 46. | யே.ஜெனினா | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம், பொதுத்தேர்ச்சி | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம், ஆங்கிலம் |
| 47. | ம.லக்ஷிதா | தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், கணிதம், பொதுத்தேர்ச்சி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 48. | பா.சோபினி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |

| | | | |
|---|---|---|---|
| 49. | பா.வைஸ்ணவி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்<br>வாய்பாடு மனனம் சிறப்புத் தேர்ச்சி |
| 50. | சி.சிவபானு | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி<br>துரிதகணிதப் போட்டி (வலயமட்டம் சிறப்புத் தேர்ச்சி) | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 51. | சி.தர்சிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி | |
| 52. | இ.அஸ்மினா | | சுற்றாடல் |
| 53. | றோ.கம்சிகா | | கணிதம், சுற்றாடல், சமயம் |
| தரம் - 6 | | | |
| 54. | செ.தர்சிகன் | கணிதம், சுற்றாடல், தமிழ், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி<br>வாய்பாடு மனனம் (வலயமட்டம் சிறப்புத்தேர்ச்சி) | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |
| 55. | ஜெ.ஜெகதீஸ்வரன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி<br>வாய்பாடு, அறநெறி மனனம் (வலயமட்டம் சிறப்புத்தேர்ச்சி) | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்<br>வாய்பாடு மனனம் தேர்ச்சி |
| 56. | கி.விதுசன் | நீளம் பாய்தல் (வலயமட்டம் 3ம் இடம்) | |
| 57. | ஞா.லோஜினி | வாய்பாடு மனனம் (வலயமட்டம் சிறப்புத்தேர்ச்சி) | பண்ணிசை தேர்ச்சி |
| 58. | ர.யசோதரன் | சமயம், தமிழ் | தமிழ், சுற்றாடல், சமயம் |
| 59. | த.பிரதீப் | சமயம் | |
| 60. | ந.பதுமிகா | சமயம், சுற்றாடல், தமிழ் | தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 61. | க.நிதர்சனா | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி<br>வாய்பாடு, பண்ணிசை, அறநெறி (வலயமட்டம் சிறப்புத் தேர்ச்சி) | தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்<br>பண்ணிசை சிறப்புத் தேர்ச்சி |
| 62. | ச.சஞ்சியா | சமயம் | |
| 63. | வ.வேதினி | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி<br>வாய்பாடு, உறுப்பெழுத்து, திருக்குறள் (வலயமட்டம் சிறப்புத்தேர்ச்சி) | தமிழ், சுற்றாடல் |

| | | | |
|---|---|---|---|
| 64. | பா.இலக்சன் | | தமிழ், சுற்றாடல், கணிதம், சமயம், ஆங்கிலம்<br>கோலப்போட்டி வலயமட்டம் தேர்ச்சி |
| தரம் - 7 | | | |
| 65. | யே.ரம்சியா | தமிழ், சமயம், சுற்றாடல், கணிதம், ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி<br>உறுப்பெழுத்து, தமிழறிவு, தெய்வானம் (வலயமட்ட தேர்ச்சி) | சமயம், கணிதம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல், சங்கீதம், தொழில்திறன், சுகாதாரம், குடியியல் |
| 66. | மு.தேனுஜா | தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி<br>துரிதகணிதப்போட்டி, வாய்பாடு, பண்ணிசை, தமிழறிவு, தெய்வானம், ஆங்கிலசொற்களஞ்சியம் (வலயமட்டம் தேர்ச்சி) | |
| 67. | அ.ஜதுர்சனா | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம்<br>தமிழறிவு (வலயமட்டம் தேர்ச்சி) | |
| 68. | வீ.மதிநிலா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி<br>துரிதகணிதப்போட்டி, வாய்பாடு, தமிழறிவு, தெய்வானம், ஆங்கிலசொற்களஞ்சியம் (வலயமட்டம் தேர்ச்சி) | |
| 69. | சி.பாமினி | | சமயம், குடியியல் |
| 70. | ச.துர்க்கா | | கணிதம், விஞ்ஞானம், சங்கீதம் |
| 71. | இ.மிதுலா | | சமயம், தமிழ், புவியியல், சங்கீதம், தொழில்திறன், சுகாதாரம், குடியியல் |
| 72. | த.ஜனனி | | புவியியல், சங்கீதம், குடியியல்<br>சைவசமயப் போட்டி வலய மட்டம் தேர்ச்சி |
| 73. | நா.மதுசா | | தமிழ், சங்கீதம், தொழில்திறன், குடியியல் |
| 74. | வி.தேனிலவன் | | சமயம், தமிழ், விஞ்ஞானம், குடியியல் |
| 75. | தி.பிருந்தன் | | கணிதம், குடியியல் |
| 76. | ஜெ.அனோஜன் | | சுகாதாரம், குடியியல் |
| 77. | க.விதுசா | | குடியியல் |
| 78. | சி.வித்தியா | | தொழில்திறன் |
| தரம் - 8 | | | |
| 79. | கெ.சஞ்சித் | கணிதம், சமயம் | சுகாதாரம் |

| | | | |
|---|---|---|---|
| 80. | செ.ஜெனார்த்தனன் | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், தொழில்திறன், குடியியல், சங்கீதம், சுகாதாரம், புவியியல், ஆங்கிலம் | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம்,தொழில்திறன், குடியியல், சங்கீதம், சுகாதாரம் |
| 81. | பா.லக்சிகா | சமயம், தொழில்திறன், புவியியல், சங்கீதம், சுகாதாரம், குடியியல் | தமிழ், தொழில்திறன், சங்கீதம், குடியியல், சமயம் |
| 82. | ம.அபிதாஸன் | தமிழ், கணிதம், விஞ்ஞானம், தொழில்திறன், குடியியல், சங்கீதம், சுகாதாரம், புவியியல் | |
| 83. | பா.தர்சிகா | | குடியியல், சமயம், சங்கீதம் |
| 84. | ஐ.ஜீவரதன் | விஞ்ஞானம், தொழில்திறன், சங்கீதம் | விஞ்ஞானம் |
| 85. | பா.விதுசன் | | சமயம், தமிழ், தொழில்திறன், சங்கீதம் |
| 86. | சி.தினுசன் | | விஞ்ஞானம் |
| 87. | பா.ஜெயசீலன் | சமயம் | |
| தரம் - 9 | | | |
| 88. | த.கிருஷிகா | தமிழ், சமயம், தொழில்திறன், குடியியல், சங்கீதம் | தமிழ், சமயம், குடியியல், சங்கீதம், சுகாதாரம், புவியியல் |
| 89. | கெ.சனுஜா | தமிழ், சமயம், விஞ்ஞானம், குடியியல், சங்கீதம் | தமிழ், சமயம், குடியியல், சங்கீதம், கணிதம், புவியியல் |
| 90. | இ.கிஷாளினி | தமிழ், சங்கீதம், விஞ்ஞானம் | தமிழ், குடியியல், சங்கீதம், சுகாதாரம் |
| 91. | கௌ.அனோஜன் | சமயம், குடியியல், சுகாதாரம், புவியியல், தொழில்திறன் | சமயம், குடியியல், புவியியல் |
| 92. | த.மாருதி | தொழில்திறன் | |
| 93. | சி.திலக்சன் | | குடியியல் |
| தரம் - 10 | | | |
| 94. | கு.றஜீவா | விஞ்ஞானம், சங்கீதம், சுகாதாரம், கணிதம், தமிழ், சமயம் | சங்கீதம், கணிதம், தமிழ், சமயம், சிங்களம் |
| 95. | அ.மதுசாளினி | விஞ்ஞானம், சங்கீதம், சுகாதாரம், கணிதம், தமிழ், சமயம், குடியியல், தொழில்திறன், ஆங்கிலம், புவியியல் | விஞ்ஞானம், சங்கீதம், சுகாதாரம், கணிதம், தமிழ், சமயம், குடியியல், தொழில்திறன், வரலாறு, சிங்களம் |
| 96. | து.சம்சிகா | விஞ்ஞானம், சங்கீதம், சுகாதாரம், வரலாறு, தமிழ், சமயம், குடியியல், தொழில்திறன், புவியியல் | விஞ்ஞானம், சங்கீதம், சுகாதாரம், தமிழ், சமயம், தொழில்திறன், வரலாறு, சிங்களம், குடியியல் |
| 97. | ம.கோபிகா | சங்கீதம், தமிழ், சமயம், குடியியல் | தொழில்திறன் |
| 98. | இ.றெஜினா | சங்கீதம், தமிழ், சமயம் | சமயம் |
| 99. | ச.அஜித்தா | சங்கீதம், சுகாதாரம், தமிழ், சமயம், குடியியல், தொழில்திறன், புவியியல் | சுகாதாரம், சமயம், குடியியல், சிங்களம் |

| | | | |
|---|---|---|---|
| 100. | ஜெ.நிருசிகா | சங்கீதம், சுகாதாரம், தமிழ் | |
| 101. | பா.கோசலா | தமிழ், சமயம் | சங்கீதம், தமிழ், சமயம், குடியியல், சிங்களம் |
| 102. | செ.பிரசாந்தினி | | சிங்களம் |
| 103. | நா.மிதுஷா | | சிங்களம்<br>சிங்களப் பேச்சு (வலய மட்டம் 3ம் இடம்) |
| தரம் - 11 | | | |
| 104. | ப.அஜித்குமார் | தமிழ், சமயம், கணிதம், சுகாதாரம், தொழில்திறன், புவியியல், குடியியல் | தமிழ், சமயம், கணிதம், தமிழ் இலக்கியம் |
| 105. | ச.கஜிதா | தமிழ், சமயம், கணிதம், சுகாதாரம், தொழில்திறன், புவியியல், குடியியல், வரலாறு, சங்கீதம், விஞ்ஞானம் | தமிழ், சமயம், கணிதம், குடியியல், சங்கீதம், விஞ்ஞானம், மனையியல் |
| 106. | சி.சர்வினா | தமிழ், கணிதம், சுகாதாரம், குடியியல், வரலாறு, ஆங்கிலம், விஞ்ஞானம், சமயம் | |
| 107. | உ.சனுசன் | விஞ்ஞானம் | சமயம் |
| 108. | பா.விதுஷா | தொழில்திறன் | |
| 109. | சி.சிந்துஜன் | | கணிதம் |
| 110. | ர.கோபிகரன் | ஈட்டி எறிதல் வலயமட்டம் 3ம் இடம் | விவசாயம் |
| 111. | ஸ்ரீ.சஞ்சீவன் | | சமயம், தமிழ் இலக்கியம், விவசாயம்( பொது அறிவுப்போட்டி தேர்ச்சி) |
| தரம் 11R-2012 | | | |
| 112. | ம.தயாளினி | தமிழ் இலக்கியநயம், குடியியல், ஆங்கிலம், சமயம், தமிழ், கணிதம், மின்ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும்<br>கட்டுரை ஆக்கம் (நூலகவாரம்) | குடியியல், சமயம், தமிழ், தமிழ் இலக்கியநயம், மின்ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் |
| 113. | ஞா.பிருசாந்தி | சங்கீதம், வரலாறு, விஞ்ஞானம், குடியியல், ஆங்கிலம், சமயம், தமிழ், கணிதம், மின்ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் | சங்கீதம், வரலாறு, விஞ்ஞானம், குடியியல், ஆங்கிலம், சமயம், தமிழ், கணிதம், மின்ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் |
| 114. | ச.கயந்தா | குடியியல், மனையியல், சமயம், தமிழ் | குடியியல், மனையியல், சமயம், தமிழ் |
| 115. | அ.மதுஜா | சங்கீதம், வரலாறு, விஞ்ஞானம், குடியியல், ஆங்கிலம், சமயம், தமிழ், கணிதம், மின்ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் | சங்கீதம், சமயம், தமிழ், கணிதம், மின்ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் |

| | | | |
|---|---|---|---|
| 116. | சு.கோகிலன் | கணிதம் | கணிதம், விவசாயம் |
| 117. | ந.ஜெனனி | குடியியல், சமயம், மனையியல் | மனையியல், சங்கீதம் |
| 118. | ர.கஜேந்தினி | குடியியல், சமயம், தமிழ் | மனையியல் |
| 119. | து.தமிழினி | | விவசாயம், தமிழ் இலக்கியநயம் |
| தரம் **11R-2011** | | | |
| 120. | அ.அனித்தா | சமயம், சங்கீதம், மனையியல் | |
| 121. | த.தர்மிகா | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, குடியியல், தமிழ் இலக்கியநயம், தகவல் தொழில்நுட்பம் | |
| 122. | உ.கஸ்தூரி | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, குடியியல், சங்கீதம் | |
| 123. | உ.செந்தூரி | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, குடியியல், சங்கீதம், தகவல் தொழில்நுட்பம் | |
| 124. | ச.றஜித்தா | சமயம், தமிழ், மனையியல் | |
| 125. | சி.பவித்திரன் | தமிழ் இலக்கியநயம், விவசாயம் | |
| 126. | சி.சிந்துஜன் | தமிழ் இலக்கியநயம், விவசாயம், சமயம் | |
| 127. | ஞா.விஜிதரன் | விவசாயம் | |
| 128. | ம.கார்த்திகா | மனையியல் | |

திரு.வீ.நடராசா (ஓய்வு நிலை உபஅதிபர்) அவர்களின் அன்பளிப்பாக இப் பரிசில்கள் வழங்கப்படுகிறது.

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2012

புலமைப்பரிசில் பரீட்சைக்கான தங்கப்பதக்கம் பெறுபவர்

ஜெ.ஜெகதீஸ்வரன் - 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விபரம் 2012

1. செ.தர்சிகன் 143 புள்ளிகள்
2. பா.இலக்சன் 138 புள்ளிகள்
3. த.நிதர்சனா 132 புள்ளிகள்
4. வ.வேதினி 126 புள்ளிகள்
5. த.யசோதரன் 110 புள்ளிகள்
6. ந.பதுமிகா 109 புள்ளிகள்
7. த.பிரதீப் 102 புள்ளிகள்

100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விபரம் 2011

1. யே.றம்சிகா 140 புள்ளிகள்
2. மு.தேனுஜா 131 புள்ளிகள்
3. வீ.மதிநிலா 131 புள்ளிகள்
4. அ.ஜதுர்சனா 124 புள்ளிகள்

க.பொ.த (சா/த) – 2011

| | | |
|---|---|---|
| 1. த.தர்மிகா | - | 5A, B, 3C |
| 2. உ.கஸ்தூரி | - | 3A, 3B, C, 2S |
| 3. உ.செந்தூரி | - | 4A, 3C, 2S |
| 4. ச.றஜித்தா | - | A, 2B, 4C, S |
| 5. அ.அனித்தா | - | A, B, 2C, 4S |
| 6. த.சிந்துஜன் | - | A, 5C, S |
| 7. சி.பவித்திரன் | - | A, 4C, 2S |
| 8. க.நிரோசாந் | - | A, 3C, 3S |

க.பொ.த (சா/த) – 2012

| | | |
|---|---|---|
| 1. ஞா.பிருசாந்தி | - | 7A, B, C |
| 2. அ.மதுஜா | - | 4A, 3B, C, S |
| 3. ம.தயாளினி | - | 3A, 3B, C, 2S |
| 4. ர.கஜேந்தினி | - | 2A, 3B, 2C, S |
| 5. ந.ஜெனனி | - | 2A, 2B, 2C, 2S |
| 6. கை.ராதிகா | - | 2A, 4C, S |
| 7. ச.கஜந்தா | - | A, 2B, 4C, 2S |
| 8. கி.நதீபா | - | A, 4C, 4S |
| 9. சு.கோகிலன் | - | A, B, 2C, 2S |

இணைபாடவிதான செயற்பாடுகளில் வெற்றிக் கிண்ணம் பெறுவோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. அ.மோகனராஜ் | - | 2011 | தமிழ் ஆக்கப் போட்டி வலயமட்டம் 1ம் இடம். |
| 2. வா.லக்சன் | - | 2011 | 75m ஓட்டம், நீளம் பாய்தல் வலயமட்டம் 1ம் இடம். |
| 3. கு.லக்சன் | - | 2011 | உயரம் பாய்தல் வலயமட்டம் 2ம் இடம். |
| 4. உ.செந்தூரி | - | 2011 | சிறுகதை ஆக்கம் வலயமட்டம் 2ம் இடம். |
| 5. த.தர்மிகா | - | 2012 | வலயமட்ட விளையாட்டுப் போட்டி 9 வயதுப் பிரிவு வெற்றி வீராங்கனை. |
| 6. ச.சஞ்சியா | - | 2012 | 100m ஓட்டம் வலயமட்டம் 2ம் இடம். |
| 7. யோ.தனோஜன் | - | 2012 | உயரம் பாய்தல் வலயமட்டம் 2ம் இடம். |
| 8. அ.மதுசாளினி | - | 2012 | ஆங்கில கதை கூறல் (English Story telling) வலயமட்டம் 2ம் இடம். |
| 9. ஞா.லோஜினி | - | 2011 | நீளம் பாய்தல் வலயமட்டம் 2ம் இடம். |
| | | 2012 | 75m ஓட்டம் வலயமட்டம் 2ம் இடம். |
| 10. பா.கோசலா | - | 2011 | ஆங்கில கவிதை ஒப்பனை (English Recitation) வலயமட்டம் 2ம் இடம். |
| | | 2012 | ஆங்கில கவிதை ஒப்பனை (English Recitation) வலயமட்டம் 1ம் இடம். |
| 11. ர.கோபிகரன் | - | 2011 | குண்டு போடுதல் வலயமட்டம் 2ம் இடம். |
| | | 2012 | குண்டு போடுதல் வலயமட்டம் 2ம் இடம். |

**இணைபாடவிதான செயற்பாடுக்ளில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டித் தங்கப்பதக்கம் பெறுபவர்**

| | | | |
|---|---|---|---|
| செல்வி.ஞா.பிருசாந்தி | - | 2011 | சமூக விஞ்ஞானப் போட்டி<br>வலயமட்டம் 2ம் இடம்,<br>மாகாணமட்டம் 1ம் இடம்,<br>தேசிய மட்டம் 5ம் இடம். |
| | | 2012 | சமூக விஞ்ஞானப் போட்டி<br>வலயமட்டம் 2ம் இடம்,<br>மாகாணமட்டம் 1ம் இடம்,<br>தேசிய மட்டம் 5ம் இடம். |

**ஸ்தாபகர் உயர்திரு.முருகேசர் முத்துத்தம்பி அவர்களின் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் பெறுவோர் விபரம்**

திருமதி.சிவஞானேஸ்வரி தபேந்திரன் (ஆசிரியை) அவர்களின் நிதியுதவியுடன் ஸ்தாபகர் உயர்திரு.முருகேசு முத்துத்தம்பி அவர்களின் ஞாபகார்த்தமாக இப்பரிசு வழங்கப்படுகிறது.

1. 2011 – உ.செந்தூரி
2. 2012 – ஞா.பிருசாந்தி

பரிசில் நாள் சிறப்புற
வாழ்த்துவோர்

# வசி போட்டோ

நுணாவில் சந்தி
சாவகச்சேரி




